RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2518

OPEN ACCESS

# பத்மவியூகம் : நுழைபவரின் மனத்திறமையும் பரிசோதிக்கும் கருவி

மு. சண்முகம் [அ, *]

[அ] தமிழ் உயராய்வுத்துறை, திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக்கல்லூரி (நிலை-1), விருத்தாசலம்-606001, தமிழ்நாடு, இந்தியா

# Padmavyugam: An instrument to test the mental ability of the entrant

M. Shanmugam [a, *]

[a] Department of Tamil, Thiru Kolanjiappar Government Arts College, Virudhachalam-606001, Tamil Nadu, India

* Corresponding Author:
shanmugamtkgac@gmail.com

Received: 05-11-2024
Revised: 02-01-2025
Accepted: 12-01-2025
Published: 26-01-2025

Check for updates

**ABSTRACT**

The orbital plane of the earth is governed by the tradition of life that love is supreme. Words are constructed according to the convenience of human beings. It is the struggles of life that oppose the five senses. Without understanding that change, progress, slurry is destroying the soil, it is also destroying natural habitats. Science, space, artificial chemistry and philosophical traditions also influence the living environment. This article also examines the epic events of bharatham, which is the epic life of destroying its life and traditions in order to destroy the enemy forces.

**Keywords:** Bharatham, Philosophical traditions, Struggles, Padmavyugam

## முன்னுரை

அன்பின் விழையது உயர்நிலை என்னும் வாழ்க்கை மரபிற்கேற்பவே புவியின் சுழற் தளம் இயங்குகின்றது. மனிதர்களின் வசதிக்கேற்பவே வார்த்தைகள் கட்டமைக்கப் படுகின்றது. வாழ்வியல் போராட்டங்களே ஐம்புலன்களையும் எதிர்த்து நிற்கின்றது. மாற்றம் முன்னேற்றம் குழம்பாட்டம் மண்ணில் அழிம்பாட்டம் என்பதினைப் புரிந்துக் கொள்ளாமலே, இயற்கையான வாழ்நிலைகளினையும் அழித்து வருகின்றது. விஞ்ஞானம், விண்வெளி, செயற்கையான வேதியியல் தத்துவ மரபுகள் முதலானவைகளும் வாழும் சூழ்நிலைகளினையும் ஆட்டிப்படைக்கின்றது. எதிரிப் படைகளை அழிப்பதற்காகவே தன் வாழ்க்கை குல மரபுகளையும் அழித்து வருகின்ற வாழ்க்கையில் இதிகாசமாக இருக்கின்ற பாரதத்தின் நிகழ்வுகளினைப் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## (86) கல்லளைபோல வயிறு!

"சிற்றில் நற்றூண் பற்றி, நின் மகன்
யாண்டுள னோ? என வினவுதி; என் மகன்
யாண்டு உளன்ஆயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே"

தோன்றுவன் மாதோ, போர்க்களத் தானே! (புலியூர்க் கேசிகன்., ((மு.ப) 2010, புறநானூறு மூலமும் உரையும்,

பாடியவர் காவற்பெண்டு, பா.எண் (86), திணை - வாகை,

துறை - ஏறாண்முல்லை, சென்னை, சாரதா பதிப்பகம்), ப.118.

முப்படைகள் வந்தாலும் போர்க்களத்தில் எதிர்த்து நின்று எதிரியை வென்ற பாகுபலி மன்னர்களும், தோற்றுப்போனாலும் போராடி குதிரையிலோ, தேரிலோ அமர்ந்த படியே சிவலோகப் பதவியை அடைந்த மன்னர்களும் புறநானூற்று காலத்தில் நாட்டை ஆண்டு வந்திருக்கிறார்கள்.

"உன் மகன் புறமுதுகிட்டு இறந்தான்" - என்ற செய்தியைக் கேட்டு அப்படி எதுவும் இருக்காது; "என் மகன் வீரன், அவன் முதுகில் காயம்பட்டு இறந்திருந்தால், அவனுக்கு பால் புகட்டிய என் மார்பகத்தை வெட்டி எரிவேன்" என்று போர்க்களத்திற்கு ஆவேசமாகச் சென்ற வீரத்தாய் புறநானூற்று காலத்தில் வாழ்ந்திருக்கிறாள்.

"வீரம் என்பது தன் உயிரைப் பெரிதாக நினைக்காமல், தன் நாட்டையும் தன் இனத்தையும் அதனைச் சார்ந்த வாழ்வியலையும், பேணிக்காக்கும் ஒருவனது அறமாகும்.

## ஆராயப் பட வேண்டிய ஆய்வுக்களங்கள்

- பாரதத்தின் மையமான நிகழ்விடம்:
- வியூகம் எனப்படுவது:
- வியூகங்களின் வகைகளாவன:
- அமைப்பு முறையான பத்மவியூகம் கருவி:
- பதிமூன்றாம் நாள்: அபிமன்யூவின் யுத்தம் :
- அபிமன்னு : தாயின் கர்ப்பத்திலே கற்காதது :
- அபிமன்னுவின் வீரம் : & அபிமன்னுவின் வீரவாக்கியங்கள் :
- அபிமன்னுவின் வெற்றிவாகையின் சிறப்புகளாவன :
- இராமரின் பாணங்களைப் போலவே அபிமன்னுவின் யுத்த களம் :
- துரியோதனனின் குற்றச்சாட்டு :
- நிராயுதபாணியான அபிமன்னு :
- அபிமன்னுவின் மரணம் :
- சுபத்திரையின் மகன் அபிமன்யூ :
- அபிமன்யுவின் அழகு அபிமன்னுவின் மரணம்:
- வடிவங்களில் சுழலும் மகாபாரதம் :
- முடிவுரை
- ஆராயப்பட வேண்டிய தளங்களாவன :
- பயன்பட்ட நூல்களான & துணைநூற்பட்டியல் :

## பாரதத்தின் மையமான நிகழ்விடம்

குருச்சேத்திரப் போர் மகாபாரதக் காவியத்தில் நடக்கும் ஒரு முக்கியமான நிகழ்வாகும். இப்போர் அத்தினாபுரம் அரியணைக்காக பங்காளிகளான கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே "குருச்சேத்திரம்" என்ற இடத்தில் நடைபெற்றது. இவ்விடம் தற்போதைய "ஹரியானா" மாநிலத்தில் உள்ளது. இப்போரானது பதினெட்டு (18) நாட்கள் நடைபெற்றது.

"ஸ்ரீ யுக்தேஷ்வர் - ஸ்ரீ ஜியின் கூற்றுப்படி, திரேதாயுகம் கி.மு. 3100 - இல் முடிந்தது. மேலும் வேதங்கள் மற்றும் பிற கணக்கீடுகளின் படி, மகாபாரதம் துவாபர யுகத்தின் முடிவில், சரியாக கி.மு. 3137 - இல் நடந்தது. மகாபாரதத்தைத் தமிழில் "பாரதம் பாடிய பெருந்தேவனார்" என்பவரே எட்டுத்தொகை நூல்கள் தொகுக்கப்பட்ட காலத்தில் பாரதத்தை தமிழ்ப் படுத்தினார். விதுரன்

அஸ்தினாபுரத்தின் அரசிகளான அம்பிகா, அம்பாலிகா ஆகியோரின் பணிப்பெண்ணான "பராஷ்ரமி" மகன் ஆவார்.

## வியூகம் எனப்படுவது

போரில் எதிரிகளைக் கொன்று, வெற்றி பெறுவதற்காகப் படையினை நிறுத்தி அமைத்துப் பின்னர் செலுத்தும் முறையே "வியூகம்" எனப்படும்.

- இறைவன் திருமாலின் இரண்டாவது எனப்படும். (பரி-3,812).
- வியூகம்: விலங்கின் கூட்டம். (சூடாமணிநிகண்டு - குறிப்பு).
- படைவகுப்பென்பது - தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த போர்தாங்கும் தன்மை அறிந்து. 1

என்னும் "படைமாட்சி" யின் திறனைப் பற்றியும் திருவள்ளுவர் இவ்வாறாக

எடுத்தி யம்பி யிருக்கின்றார்.

வியூகங்களின் வகைகளாவன:

- அர்த்த சக்ர வியூகம் - (அரை வட்ட வியூகம்).
- கிரௌஞ்ச வியூகம் - (பறவை வியூகம்).
- மண்டல வியூகம்.
- சகட வியூகம் - (வண்டிச் சக்கர வியூகம்)
- சக்கரவியூகம். வஜ்ரவியூகம். மின்னல் வடிவம் என்று ஜெய மோகன் இன்று வந்த பிரயாகையின் போர்க்களக் காட்சி பிரமிப்பூட்டியது என்று "பத்மவியூகம்" என்னும் தன் படைப்பிலே புனைந்திருக்கின்றனர்.

(1) பரிமேலழகர் (உரை). (மு.ப) 1962, திருக்குறள், (பொருட்பால். (77) படைமாட்சி அதிகாரம், குறள் 767), பக் (325 - 326).

விஷீவலாக போரை நேரல் பார்ப்பது போல இருந்தது என்றும் கூறியிருக்கின்றனர். மேலும், இவைகளே கீழ்வரும் பெயர்களிலும் வழங்கி வந்திருக்கின்றனர். எகிப்தின் ஹெரோடோஸின் லாபிரிந்த், தீதஸ் மூலம் உடைக்கப்பட்ட மினோடார்ஸ் லே பிரிந்த் குறிப்பாக மற்ற லே பிரிந்த்கள் இருந்தன.

எகிப்தின் ஹெரோபோடஸின் லாபிரிந்த், தீசஸ் மூலம் உடைக்கப்பட்ட மினோடார்ஸ் லே பிரிந்த் குறிப்பாக மற்ற லே பிரிந்த்கள் இருந்தன.

- கிளாசிக்கல் லாபிரிந்த்
- டிரிபிள் ஸ்பைரல் லே பிரிந்த்
- இடைக்கால லாபிரந்த்
- பெரிய இந்திய லாபிரிந்த் (அ) சக்ரா வியூஹா

என்னும் பெயர்களிலும் வியூகங்களின் அமைப்புகளைப் பற்றியும் குறித்து வருகின்றனர்.

## அமைப்பு முறைமையான பத்ம வியூகக் கருவி

சக்கர வியூகம் அல்லது பத்மவியூகம் என்பது; "பன்டைய பாரதப்போர் - முறைகளில் பயன்படுத்தப்பட்ட ஒருபோர் அணிவகுப்பாகும். இது எதிரிப் போராளியை மீள - முடியாமல் மாட்ட வைக்கும்; ஒரு சுழலும் போராளி அணி வகுப்பு அமைப்பாக கருதப்படுகிறது. வெவ்வேறு அளவுகளினால் ஆன ஏழு வட்ட சக்கரங்களாக "சக்கர வியூகம்" அமைக்கப்படுகிறது.

பத்மவியூகம் ஒருவரின் பலத்தை மட்டும் சோதிப்பதில்லை. ஆனால் அதில் நுழைபவரின் மனதிறனையும் சோதிக்கும். “சக்கரவ்யூஹம் அல்லது பத்மவ்யூஹம்” ஏழு (7) வட்டங்களைக் கொண்டுள்ளது. மற்றும் ஒரு திறப்பு உள்ளது. வியூகம் சுழலும் பாதையில் தொடர்ந்து நகர்கிறது.

திறப்புடன் அதில் நுழைபவர் இரண்டு (2) வட்டங்கள் தேவையில்லாமல் மூன்றாவது (3) வட்டங்களுக்குள் செல்வார். பின்னர் அந்த வியூஹனுக்கு முறையே பலம் வாய்ந்த வீரர்கள் இருப்பார்கள். இந்த “வைகாவில் நீங்கள் போரிடும் போது இரு தரப்பிலும் உள்ள ராணுவத்துடன் போரிட வேண்டும். இது வட்டங்களில் சுழல்கிறது. நீங்கள் வழங்கும் வட்டத்தை உங்களால் நினைவில் கொள்ள முடியவில்லை. “சக்ரா” என்றால் “சுழலும் சக்கரம்” மற்றம் வியூஹா என்றால் உருவாக்கம். எனவே,

“சக்ரவ்யூஹா என்பது சுழலும் சக்கரத்தின் வடிவத்தில் தொடர்ந்து நகரும் வீரர்களின் குழப்பமான ஏற்பாடு என்று பொருள். சக்ரவ்யூஹா என்பது பல அடுக்கு தற்காப்பு அமைப்பாகும். இது மேலே இருந்து பார்க்கும் போது ஒரு வட்டு (சக்கரம்) போல தோற்றமளிக்கிறது.”

பாண்டவர்களின் தலைவனான யுதிஷ்டிரானை போர்க்கைதியாகக் கைப்பற்றும் நோக்கத்துடன் போரின் பதின்மூன்றாவது (13) நாளில் துரோணர் சக்ரவ்யூஹத்தை உருவாக்கினார்.

“பத்மவியூகத்தில் போர் நெறிமுறைகளுக்கு எதிராகவே; முக்கிய எதிரிகளான துரியோதனன், துஷாஷன், சகுனி, ஜயத்ரதன், கர்ணன் மற்றும் அனைவரும் சேர்ந்து அவரை வெவ்வேறு ஆயுதங்களால் தாக்கினர். பதினெட்டாம் போர் (18) வரையிலும் தவறு தப்பான வியூகங்களால் முன்னேறி வந்தாலும், தன் படைபலம் முதலான உலக மக்கள் பலரையும் இழந்தாலும், வெற்றிவாகையினைப் பாண்டவர்களுக்கே கொடுத்து, தோல்விச் சினைகளோடவே கௌரவர்கள் வீழ்ந்தார்கள் என்பதே வரலாறாகவும் இருக்கின்றது.

## பதிமூன்றாம் நாள் (13) அபிமன்னுவின் யுத்தம்

மகாபாரதக் கதையினையே “ஜெனமேஜய” மகாராசனுக்கு “வைசம்பாயனர்” தான் கதையாக, வரலாற்றினைக் கூறுவது தான் இதுகாறும் மரபாக இருந்திருக்கின்றது. அர்ஜீனனை திசை திருப்பிய துரோணர் தன் வியூகத்தில் வென்றுவிட்டார். அடுத்த கணமே அபிமன்யூ - வைக் கொல்ல துரோணர் பத்மவியூகத்தினை அமைத்தார். முகப்பில் (துரோணரே) அவர் இருந்து தலைமைத் தாங்கினார். அஸ்வத்தாமன், துஷ்பரதர்ஷன், துஸ்ஸலன், அனுவிந்தன், உபசித்ரன், சித்ராகஷன் உட்பட எழுபத்தாறு (76) வீரர்களும், நூற்று கணக்கான காலாட்படை வீரர்களும் பத்மவியூகத்தின் சுவர்களாக நின்றனர்.

பத்மவியூகம் என்பது ஓர் புள்ளி. தொடர் சுழல் போன்றதாகும் (Spiral Appearance). பத்மவியூகத்தை உடைத்து உள்ளே செல்வது கடினம். மீறி உள்ளே சென்று வெளியே வந்துவிட்டால் வியூகத்தை வென்றுவிட்டதாக அர்த்தம். உள்ளே செல்வதை விட வெளியே வருவது நூறு மடங்கு சிரமம். ஒவ்வொரு திருப்பத்திலும் இரண்டு அல்லது மூன்று மகாரதர்கள் இருப்பர். அவர்களுக்கு துணையாக அவர்களின் காலாட்படை வீரர்கள் இருப்பார்கள். வியூகத்தின் மத்திய புள்ளிக்கு சென்றுவிட்டால், எந்த திசையில் இருந்தும், யார் வேண்டுமென்றாலும் தாக்க கூடும்.

“எப்பக்கத்தில் இருந்து அம்பு பாய்கிறது. யார் ஈட்டி எறிகிறார்கள், யார் போர்வாள் சுழற்றுகிறார்கள், கதாயுதம் எங்கிருந்து வரும், யார் தாக்குவார்கள், இவை எதையுமே யூகிக்க முடியாது. “பத்மவியூகத்தை உடைக்க அசாத்திய ஆற்றல் வேண்டும்”. அந்த விசை எதிர்திறன் கொண்ட அம்சம் வில்லாற்றலில் சிறந்தவன் விசயன் ஒருவனுக்கே என்று பாரதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனர்”. 2

இரா.சீனிவாசன் & த.கருணாநிதி., மகாபாரத வசன காவியங்கள், பக்.(66-107).

## அபிமன்னு:தாயின் கர்பத்திலே கற்காதது

வியூக அமைப்பைக் கண்டு தருமர் கலக்கமுற்றார். அபிமன்யூவிடம் ஒரு தனி ஆற்றல் இருந்தது. அவனால். பத்மவியூகத்தை உடைத்துகொண்டு உள்ளே செல்ல முடியும். இந்த இரகசியத்தை

அவன் தன் தாயின் கருவில் இருக்கும்போதே கற்றிருந்தான். உள்ளே நுழையும் பறிற்சியைப் பெற்றிருந்த அபிமன்யூ வெளியே வரும் பயிற்சியைப் பெற்றிருக்கவில்லை.

ஆயினும் அபிமன்யூ வியூகத்தை உடைத்துக்கொண்டு உள்ளே செல்லும் போது, அவனுக்குத் துணையாக பல்லாயிரக் கணக்கில் வீரர்களும் பீமனும் சுலபமாக உள்ளே நுழைந்து விட்டால்; வியூகத்தை எளிதில் உடைத்து விடலாம் என்று தருமர் எண்ணனார்.

பதினாறே (16) வயதான அபிமன்யூவின் துணிச்சலை கர்ணன் மட்டும் அல்ல. துரியோதனனும் கண்டு வியந்தான். தன் முதல் அம்புவிலேயே தலையாய் நின்ற துரோணரின் வில்லை முறித்தான். வியூகத்தின் வாயிலை உடைத்தான். அபிமன்னு ஆனால் மற்ற வீரர்கள் உள்ளே செல்லும் முன் ஜயத்ரதன்" தன் மாயசக்தி கொண்டு வியூகத்தின் நுழைவை மறைத்து விட்டான். யாரையும் உள்ளே நெருங்க விடவில்லை. தனிமை படுத்தப்பட்டான் அபிமன்னு.

## அபிமன்னுவின் வீரம்

சற்றும் மனம் தளராத அபிமன்னு; பீஷ்மனுக்கு இணையான வில்லாளி தந்தைக்குப் பிறகு இவர் மட்டுமே. திக்குகள் எட்டிலும் அபிமன்னு அம்புகளை சீறிசீறி சீற்றிக்கொண்டே இருந்தான். கர்ணனின் குதிரைகளைக் காயப்படுத்தினான். துரியோதனனின் மகுடத்தை மண்ணில் தள்ளினான். துச்சாதனனின் தேரை முறித்தான். அஸ்வத்தாமனை “கதை” கொண்டு விரட்டினான்.

துணைக்கு யாரும் இல்லாத நிலையில் மாபெரும் போர் வீரர்களுடன் பதினாறே (16) வயதான அபிமன்னு தனித்து நின்று போரிட்டான். அவன் வீரம் கண்டு துரோணர். கிருபரிடம் “இவன் வீரத்தில் அர்ச்சுனனை விட சிறந்து காணப்படுகிறான்.” என்று வியந்து பாராட்டினார்.

## அபிமன்னுவின் வீர வாக்கியங்கள்

ஐயா! நான் உங்களுக்கு எதிரி அல்ல. உங்களுக்கு எதிரி என் பெரிய தந்தை (வீமராசன்) தான். ஆகையால் நீங்கள் வந்ததும் தெரியாமல் இருக்க, புற முதுகிட்டு வந்த வழியே ஓடிவிடுங்கள் என்று தனக்கே யுண்டான வீர கணையங்களால் ஆன வார்த்தைகளை; எதிரிப் படைகளுடன் அபிமன்யூ கூறுகின்றார்.

அதனால் அடியுண்டு இடியுண்டு ஓடும்படியாகிய தம்பிமார்களின் பாங்கிலிருந்த சல்லியராசனும், அவன் தம்பியும், வில்லை வளைத்து, கொல்ல வரும் வேங்கையைப் போல் தாவித் தேருடன் மேவிப் போர் செய்யும் போது, கார்நிறக் கண்ணன் மருமகனுடைய கணைகளினால் சல்லியன் தம்பி தலை அறுந்து ஒழிந்தான்.

சூசிகா யூகத்தையும் உடைத்து, சேனைகளை மாய்த்து, பத்மயூகத்தையும் முனைகெடச் சாய்த்து, தேருடன் உல்லாசமாய் உலாவிக் கொண்டிருந்த்து.

தன்னைச் சரண் அடைந்தவர்க்குப் பிராணாதாரன் ஆகிய அபிமன்னு, சாணைபிடித்துத் தைல தூபம் செய்த சத முகக் கணைகளால் அணிவகுத்திருந்த சேனை வீரர்கள் யாவரும் அழிந்து, யாவும் உடைந்து, பிராணன் அழிந்து, உதிரத்தில் விழுந்து கலக்கிய குளத்தில் அழிந்த நீலோற்பலம் போன்று இருந்தது.

## அபிமன்னுவின் வீரம்

இவைகள் அன்றியும் முரசு, பேரி, காகளம், டமா, பூரி, தாரை, சின்னம், கொம்பு, குடை, கொடி, முடி, கவசம், பதக்கம், ஆரம், மாலை, வில், வாள், கேடயம், வேல், கதை, வாங்கு, ஈட்டி இவை முதலாகிய எல்லாவற்றையும், அபிமன்னன் சேதித்து வீழ்த்துதல், அந்தரத்தில் உலாவுகின்ற முழக்கம் உடைய மேகங்களும், சந்திர சூரியர் முதலாகிய கிரகங்களும், நட்சத்திரங்களும், ஆகாய கங்கையில்

உலாவிய மச்சங்களும், விண்டலத்தை விட்டு விழுவி மண்டலத்தில் உதிர்ந்து விழுந்த தன்மை போன்று இருந்தது.

துரியன் பல மன்னரையும் அபிமன்னுவின் மேல் போரிட ஏவுதல்; அசுவத்தாமன் முதலானவர்கள் அபிமன்னுவுடன் போரிட்டுத் தோற்று ஓடுதல் துரோணாசாரியாரும் தோற்று ஓடினர்.

துரோணசாரியாரின் மகன் அசுவத்தாமனும் சிந்தை வருந்தி கோபம் கொண்டு, தன் தேரைச் செலுத்தி பலவழிகளிலும் கணைகளும் அதாவது பல பக்கங்களிலும் உருவும் படியாய்ப் பாணங்களை விடுத்தான். அப்போது, அபிமன்னன் அவன் தொடுத்த அப்புக்கு இணையாக விடுத்த சரமாரியில் பாதாதிகேசம் வரையிலும் முழுகி உதிரம் பெருகப் பரிதவித்துப் பின்னிட்டான். அதிகாலையில் கிருபாசாரியரும் கிருதவன்மனும் அபிமன்னுவுடன் போர் புரிய அனைத்தும் இழந்து பற்களும் திறந்து, விற்களும் முறிந்து வெறுங்கை வீனராய் ஓடிப் பிழைத்தார்கள்.

இந்த போர்முறைகளைக் கண்ட மாமன் சகுனியும் வெகுண்டு, அவனுடைய சிரேஷ்ட புத்திரன் உலூகனும், இன்னும் உள்ள காந்தார தேசத்தலைவர் அனேகரும், நால்வகைச் சேனையும், பெருங்கடல்போல் இரைந்து, அபிமன்யூ போரிட்டனர்.

## அபிமன்னுவின் வெற்றி வாகையின் சிறப்புகளாவன

அச்சுதன் என்னும் கிருஷ்ணமூர்த்தியின் மருமகனாகிய அபிமன்னன், வீரவில் தாங்கிய மகாவீரர்களுடைய இரண்டு தோள்களையும் அறுத்துத் தள்ளுதல், பட்டினங்களைப் பாழ்படுத்திய நாள்களில், தேவேந்திரனானவன் அந்த மலைகளின் இறக்கைகளை வச்சிராயுதத்தால் அறுத்து அகற்றிய பான்மையை ஒத்திருந்தது.

உத்தரை குமாரத்திக்கு நாயகனாகிய அபிமன்னுவானவன் பத்மயூகத்தில் செறிந்து நிறைந்து நிற்கின்ற மன்னவர்களின் தேர்களையும், அத்தேரில் பூட்டிய குதிரைகளையும், சாரதியையும், நிலத்தில் புதையும் படியாகத் தகர்த்து வீழ்த்துதல்,

சுபத்திரையின் கர்ப்பத்தில் தோன்றிய மாசற்ற மணிக்கு ஒப்பாகிய அபிமன்னுவானவன், உந்திவிடுக்கம் கூர்மைகொண்ட பிரகாசம் பெற்ற சந்திரபாணங்கள், இந்திர பாணங்கள், அக்கினி பாணங்கள் கூட்டமாகிய யானைகளின் உடல்களைத் தவத்தைக் கெடுத்து, பவத்தை விளைத்துக் கொண்டிருந்த கிரவுஞ்ச கிரியைத் துண்டாகத் துளைத்த பாலசுப்பிரமணியருடைய கொடிய வேலாயுதம் போல் இருந்தது.

## இராமரின் பாணங்களைப் போலவே அபிமன்னுவின் யுத்தகளம்

தேவேந்திரனுக்குப் பேரனாகிய அபிமன்னுவானவன், இவன் விடுகின்ற அம்பானது, துரியோதனுடைய படையில் நிறைந்த குதிரைக் கும்புகளை எல்லாம், வம்பாக எரித்துக் கரித்துத் தும்பாகப் பறக்கும் படிக்குச் செய்தல். “இமயமலை போன்ற புய வீரனாகிய அருச்சுன ராசன், பிரியோகம் செய்த அக்கினி அஸ்திரங்களினால் இந்திரனுடைய காண்டவ வனம் எரிந்த தன்மையை ஒத்திருந்தது. அபிமன்னு விடும் கணைகளானது சந்திர வட்டக்குடைகளை தகர்த்துச் சாய்க்குதல்.

“இராவணனுடைய சிரங்களில் கவிந்திருந்த சுவேத நிறக் குடைகளை ராமர் பாணங்களினால் துண்டித்ததை ஒத்திருந்தது. புஜபல பராக்கிரம சாலியாகிய இணை இல்லா அபிமன்னுவானவன், சாங்கோப சங்க புங்கானு புங்கமாய்ப் பிரயோகம் செய்யும் புங்கவங்களால், ரத, கஜ, துரக, பதாதிகள் என்னும் கருங்கடல் தீஞ்சு போகா நின்றது.

பின்னும், தேவர் முதலிய யாவரும் துதிக்கும் நிசாபதி என்னும் சந்திர மரபில் உதித்த அபிமன்னுவானவன், சகட யூகத்தையும், கற்று அவனின் பிறப்பிலே அறிந்திருந்தான்.

அபிமன்யூவின் வீரம் இன்னும் மிச்சம் இருக்கிறதே. உடைந்த தன் தேரில் இருந்து தேர் சக்கரத்தைக் கையில் ஏந்தினான். கேடயமாக பயன்படுத்தவில்லை. ஆயுதமாகக் கொண்டு மீண்டும்

தாக்க ஆரம்பித்தான். அப்போது துச்சாதனனின் மகன் கோழை போல் பின்னாலிருந்து தன் கதையால் "அபிமன்யுவின் தலையில் தாக்கினான். சுருண்டு விழுந்தவன் எழுந்து விடுவானோ? என்ற பயத்தில் மற்ற மகாரதர்கள் தங்கள் ஆயுதங்களால் வலிமையாகத் தாக்கி, அபிமன்யு தரையில் சாய்ந்தான். கையில் ஆயுதமும் இன்றி துணைக்கும் யாருமின்றி போர் செய்த சிங்கக்குட்டியை, மாவீரனான அபிமன்யூ - வை, நரிகள் ஒன்று சேர்ந்து கொன்றது. வீர மரணம் வரவேற்றது. மரண தேவன் கூட அவன் உயிரை எடுக்க சில கணம் தயங்கினான் என்கிறது மஹாபாரதம்.

தென் திசையில் சம்சப்தர்களை ஒழித்துத் திரும்பிய அர்ச்சுனன் காதில் இச்செய்தி விழ, அவன் மயங்கி விழுந்தான். கண்ணனின் ஸ்பரிசம் பட்டு எழுந்த அர்ஜீனன், மகனின் உடலை கட்டித் தழுவி அழுதான். மகனின் மரணத்திற்கு மூலக் காரணம் ஐயத்ரதன் என அறிந்தான். பின்,

"ஐயத்ரதனை நாளை சூரிய அஸ்தமணத்திற்குள் கொல்வேன். தவறினால், அஸ்தமனமானதும் நான் அக்னிப் பிரவேசம் செய்து விடுவேன். இது கண்ணன் மீது ஆணை என்று சபதம் செய்தான்"

## துரியோதனனின் குற்றச் சாட்டு

எதிரிப் படையைக்கண்டு விறுவிறுப்புடன் தோல்வி அடைய வைப்பதே என்று துரோணர் குருவினை கேள்விக் கேட்கின்றார்.அதற்காக குருவும் வெட்கி தலை குனிகின்றார். சிறப்பு வில்லாற்றலா ...? கதை ... யாயுத வில்லாளியா ...? நய வஞ்சக சூதனிடம் இவர்களெல்லாம் எப்பக்கம்? நம் மீதே நாம் வெற்றிக் கொள்ளவில்லை யென்றால்? எதிரிகளெல்லாம் நம்மை காற்றில் கூட ஆழ்த்தாமல் வேறென்ன செய்வார்கள்? என்று நம் படைகுலத் தலைவரான துரோணரையும், கிருபரையும் வியப்பில் ஆழ்த்துவது, மேலும் இதுவே கௌரவர் படைக்கும் செய்யும் நம்பிக்கைத் துரோகம் என்று கூறினார் துரியோதனன். "நம் படையின் உற்சாகங்கள் குறையும்" என்றும் துரியோதனன் ஆசுவாசப்படுகின்றார்.

## நிராயுதபாணியான அபிமன்னு

துரோணர் விட்ட அம்பு அபிமன்யுவின் தேர்க்கொடியை அறுத்தது. கர்ணனின் அம்பு தேர்ச் சக்கரத்தை முறித்தது. துரியோதனனின் ஆயுதம் தேர்ப்பாகனைக் கொன்றது. சகுனியின் பாணம் அபிமன்யுவின் வில்லை முறித்தது. பாணம், அபிமன்யுவின கரத்தைக் கிழித்தது. ஆனால் எதற்கும் தளராத அபிமன்யூ, வாளைக் கையில் ஏந்தி தேரிலிருந்து குதித்து பலநூறு வீரர்களை வெட்டி வீழ்த்தினான்.

உடம்பெல்லாம் புண்ணாகி, குருதி ஒழுக, நிராயுதபாணியாக நின்றான் அபிமன்யு. எனினும் அதர்ம யுத்தம் புரிந்த கௌரவர்களைக் கண்டு அவன் சிறிதும் அஞ்சவில்லை. தொடர்ந்து போரிட்டான். ஆயுதம் இல்லை என்றால் என்ன? மனத் துணிவினைக் கொண்டு போரிட்டான்.

இன்றைய போரில் செயம் எங்களுடையது என்று மங்களம்பாடிச் சொல்லும் படியாக வெல்லுகிறோம்; எனறு பேசிக்கொண்டு, அறியாத பயலுக்கு யாவரும் இளைக்கிறதா என்று ஏசிக்கொண்டு, அபிமன்னுக்கு எதிரில் வந்து அனுகினார்கள்.

அபிமன்னு சண்டையிட்டு தோல்வியுறச் செய்தான். இதைக்கண்ட மாமன் சகுனியோ! "என்னுடைய மருமஸ்தான பூமியின் உறுப்பை செல்வத்தைக் கிழிக்கவே தாய் மாமன் சகுனியும் பயந்து", கெட்டவர்கள் பிள்ளை வாய்ப்பது புண்ணியவானுக்கு அல்லவோ, நாம் பேராசை கொள்ளுவது விருதா அல்லவோ என்று பேசிக்கொண்டு ஓடினான் சகுனியானவன் சல்லியன்.

துரியோதனன் தம்பி விகர்ணன் என்னும் நீதிமான், துன்முகன் முதலாகிய தம்பிமார்களுகம் வந்து கலந்து, மலைந்து மிகுந்த சமர் தொடுத்தார்கள். சல்லியராசனும், அவன் தம்பியும், வில்லை வளைத்து, கொல்ல வரும் வேங்கையைப் போல் தாவித் தேருடன்ss மேவிப்போர் செய்யும் போது, கார்நிறக் கண்ணன் மருமகனுடைய கணைகளினால் சல்லியன் தம்பி தலை அறுந்து ஒழிந்தான்.

## அபிமன்னுவின் மரணம்

அபிமன்னுக்கு பதில் அளிக்கும் விதமாக போரில் துரோணர் வீரத்தைக் காட்டினார். எப்படியாவது இந்த பதிமூன்றாம் (13) நாள் போரில், அபிமன்னுவினை வீழ்த்தி, தோல்விப் பெறச் செய்து போர்க்களத்திலே அவனை சாகடிக்க வேண்டும். என்று துரோணர் எண்ணினார். அதற்காகவே "அதர்ம யுத்தத்தில் மட்டுமே கௌரவப் படையினர்கள் ஈடுபட்டார்கள்.

கர்ணன் யுத்த நெறிக்குப் புறம்பாக பின்னால் இருந்து அபிமன்னுவின் வில்லை முறித்தான். பின்புறமிருந்து வில்லை. கண்டித்தார். அதே முறையில் கர்ணன் அவனது கேடயத்தைத் தகர்த்தான். மாவீரன் அபிமன்யூ குதிரையையும், வில்லையும், வாளையும் கேடயத்தையும் இழந்தாலும்; அபிமன்யூ இன்னும் வீரத்தை இழக்கவில்லை. ஒரு கதாயுதத்தைக் கையில் ஏந்தி அசுவத்தாமாவை விரட்டினான். பல வீரர்களைக் கொன்றான்.

முன்னர் திரௌபதியை தூக்கிச்செல்ல முயன்று தோல்வியுற்று பாண்டவர்களால் அவமானப்பட்ட ஐயத்ரதன், பாண்டவர்களை பழிதீர்த்துச் சிவனை நோக்கித் தவம் செய்து, அர்ச்சுனனைக் கொல்ல இயலாது. எனினும் ஒரு நாளாவது மற்ற நான்கு பேர்களை சமாளிக்கக் கூடும் என்னும் வரத்தைப் பெற்றிருந்தான். அதற்கான வாய்ப்புக் கிடைத்தது. பீமன், நகுலன், சகாதேவன், தருமர் ஆகியோர் அபிமன்யூவிற்கு உதவி செய்யாதவாறு தடுத்தான். இறுதிவரை வீரத்தோடு போர் புரிந்த அபிமன்யுவின் தேகத்தை துரோணர், கிருபர், கர்ணன், ஐயந்தரதன் ஆகியோர் செலுத்திய அம்புகள் துளைத்தது.

## சுபத்திரையின் மகன் அபிமன்யு

விசயனும் சுபத்திரையும் காதலாகி கண்ணீர் மல்க, கரம் பிடிக்கின்றனர். மணந்து கொண்டதின் விளைவாலும் "அபிமன்யு" மகனாகப் பிறக்கின்றார்.

"கற்றவர் புகழும் மாதவற்கு இளைய காமரு கருங் கணாள் கருங்கொண்டு

உற்றது நோக்கி, யாவரும் மகிழ்ந்தாள்; உடம்பரும் மலர்மழை பொறிந்தார்;

பற்றலர் நடுங்க, குலம் தழைத்து ஓங்க, பாண்டுநந்தனர் புளகு அரும்ப

மற்று ஒரு தினத்தில் அவதரித்தனன், சீர்வளர் அபிமன்னு ஆம் மகனே" 3

என்றவாறு அபிமன்யுவின் பிறப்பினைப் பற்றியும், அவனுடைய வீரம் பற்றியும் பாரதத்து புகழப்பட்டுள்ளது.

முன்னர் திரௌபதியை தூக்கிச் செல்ல முயன்று தோல்வியுற்று, பாண்டவர்களால அவமானப்பட்ட ஐயத்ரதன், பாண்டவர்களை பழிதீர்த்துச் சிவனை நோக்கித் தவம் செய்து, அர்ச்சுனனைக் கொல்ல, இயலாது.

எனினும் ஒரு நாளாவது மற்ற நான்கு பேர்களை சமாளிக்கக் கூடும் என்னும் வரத்தை பெற்றிருந்தான். அதற்கான வாய்ப்புக் கிடைத்தது. பீமன், நகுலன், சகாதேவன், வீரத்தோடு போர் புரிந்த அபிமன்யுவின் தேகத்தை துரோணர், கிருபர், கர்ணன், ஐயத்ரதன் ஆகியோர் செலுத்திய அம்புகள் துளைத்தது.

துரோணர் விட்ட அம்பு அபிமன்யுவின் தேர்க்கொடியை அறுத்தது. கர்ணனின் அம்பு தேர்ச் சக்கரத்தை முறித்தது. துரியோதனனின்

இரா.சீனிவாசன்., ந.பாரதம் 32. தீர்த்த யாத்திரைச் சுருக்கம், பாடல் 1886, ப.480.

ஆயுதம் தேர்ப்பாகனை கொன்றது. சகுனியின் பாணம் அபிமன்யுவின் வில்லை முறித்தது. துச்சாதனின் பாணம்அபிமன்யுவின் வில்லை முறித்தது. துச்சாதனின் அம்பு அபிமன்யுவை கீழே தள்ளியது. ஐயத்ரதனின் பாணம், அபிமன்யுவின் கரத்தைக் கிழித்தது. ஆனால் எதற்கும்

தளராதஅபிமன்யூ, வாளைக் கையில் ஏந்தி தேரிலிருந்து குதித்து பலநூறுவீரர்களை வெட்டி வீழ்த்தினான்.

உடம்பெல்லாம் புண்ணாகி, குருதி ஒழுக, நிராயுதபாணியாக நின்றான் அபிமன்யு; எனினும், அதர்ம யுத்தம் புரிந்த கௌரவர்களைக் கண்டு அவன் சிறிதும் அஞ்சவில்லை. தொடர்ந்து போரிட்டான். ஆயுதம் இல்லை என்றால் என்ன?

அபிமன்யூவின் வீரம் இன்னும் மிச்சம் இருக்கிறதே. உடைந்த தன் தேரில் இருந்து தேர் சக்கரத்தை கையில் ஏந்தினான். கேடயமாக பயன்படுத்தவில்லை. ஆயதமாக கொண்டு மீண்டும் தாக்க ஆரம்பித்தான்.

அப்போது துச்சாதன்னின் மகன் கோழை போல் பின்னாலிருந்து தன் கதையால் அபிமன்யுவின் தலையில் தாக்கினான். சுருண்டு விழுந்தவன் எழுந்துவிடுவானோ என்ற பயத்தில் மற்ற மகாரதர்கள் தங்கள் ஆயுதங்களால் வலிமையாகத் தாக்கி அபிமன்யு தரையில் சாய்ந்தான். கையில் ஆயுதமும் இன்றி துணைக்கும் யாருமின்றி போர் செய்தான்.

## அபிமன்யுவின் அழகு

அபிமன்யு தந்தைக் கேற்றார் போலவே படையாற்றல், வில்லாற்றல் போன்ற சாதனைகளிலும் விளங்கியிருந்தார். இவர் அழகில் மட்டுமின்றி அறிவுசார் வளமைகளிலும் சிறப்பானவர் என்பதிலும் ஐயமில்லை.

"அண்ணாந்து பார்க்க வைக்கும் உயரம் அகன்ற மார்பு அதைப்

பார்த்ததும் மனம் மலரும் மறுகணம் கண்பட்டுவிடுமோ

என்று சுருங்கும் முன்பின் தெரியாத உத்வேகம் அவனுக்கு" 4

பந்த, பாசம் முதலானவகைகளில் இருந்து விடுபடுவதில்லை. உலக - வாழிவியலின் மையப் புள்ளிகளே பாரதக் கதையின் சுழலும் சக்கரங்கள் தான்.

என்று அபிமன்யுவின் வீரத்தினையும், எழில் பொங்கும் தோற்றத்தினையும் ஜெயமோகனால் விளக்கமாக தன் கதையினூடாகவே விவரிக்கப் பட்டிருக்கின்றன.

## பல வடிவங்களில் சுழலும் மகாபாரதம்

அன்பின் அடி சதையின் பிழம்புகள் போலவே; மகாபாரதமும் மக்களுள்ளே எதிரொளித்துக் கொண்டுள்ளன. அய்ம்பூதங்களின் அடி நாதங்களைப் போலவே, சுவாசிக்கும் காற்றாகப் பாரதமும் உயிர்களின் செல் நெறிகளாக இருக்கின்றன.

"மகாபாரதம் கூறும் அனைத்தையும் மகாபாரதத்தை வைத்தே நிராகரிக்கலாம். இந்த சாத்தியம் தான் பின் - நவீனத்துவ காலம் வரை இலக்கியவாதிகளை அதை நோக்கி இழுக்கிறது. மகாபாரதம் மனித வாழ்க்கையை மட்டும் பிரமாணமாகக் கொண்டது. நெறிகளுக்கு அடங்கிய ஓட்டம் அல்ல வாழ்க்கை. இவ்வாறு மகாபாரத்தை மறு ஆக்கம்

ஜெயமோகன்., ஜெயமோகன் குறுநாவல்கள், (பத்ம வியூகம்) ப. 227.

செய்யும்போது செய்யப்படும் முதிர்ச்சியற்ற ஒரு போக்கு. மகாபாரதக் கதை மீது நவீனகால ஒழுக்கவியலையோ, மதிப்பீடுகளையோ போட்டு அக்கதையை தலைகீழாக்கி போடுவது. சில கதாபாத்திரங்களைக் கூண்டில் நிறுத்தி சவுக்காலடிப்பது போன்றவை.5

என்று பாரதக் கதையான; மறுவாசிப்பின் போது ஜெயமோகனால் மேற்கூறிய வார்த்தைகள் வெளிப்பட்டுள்ளன.

## முடிவுரை

சல்லியன் தம்பி அபிமன்னுவால் இறத்தல், அபிமன்னுவுடன் போரிட துச்சாதனன் செல்லுதல் கர்ணன் அபிமன்னுவிடம் அடிப்பட்டுத் தோற்று ஓடுதல், அபிமன்னுவுக்குத் துணையாக வீமன் போருக்கு வந்து படையைக் கலக்குதல், வீமசேனன் அபிமன்னுவுக்குத் துணையாக வீமன் போருக்கு வந்து படையைக் கலக்குதல், வீமசேனன் அபிமன்னுவுடன் சேராமல் தடுக்குமாறு மன்னர்களிடம் துரியன் உரைத்தல் வந்தவர்கள் வீமனிடம் அடிப்பட்டுத் தோற்று ஓடுதல். துரியன் வீமனையும் மற்றவர்களையும் தடுக்குமாறு சயத்ரதனிடம் உரைத்தல், சயத்ரதன் வீமன் முதலியவர்களை வியூயத்திற்குள் நுழையவிடாமல் தடுத்தல், கௌரவப் படையினர் அனைவரும் அபிமன்னுவுடன் கடும்போரிடல், அவர்களை அபிமன்னு அடித்துத் துரத்துதல், அபிமன்னுவுடன் துரியன் மகன் இலக்கணக் குமாரன் முதலியவர்கள் போரிடுதல், வியூகத்தைவிட்டு வெளியேறுமாறு சாரதி உரைத்தல் அபிமன்னு வியூகத்தைவிட்டு வெளியேறா வண்ணம் தடுக்குமாறு துரியன் தூண்டுதல். மீண்டும் போருக்கு வந்த இலக்கணக் குமாரனை அபிமன் அழித்தல், மகன் இறந்ததால் துரியன் அபிமன்னுவைக் கொல்லுமாறு பலரையும் ஏவுதல், அபின்னு பலரையும் கொல்லுதல், துரியன் கர்ணனை அபிமன்னுவின்மேல் ஏவ, அவன் தோற்று ஓடுதல், கர்ணன் துரோணன் முதலியவர்கள் அபிமன்னுவின் வில், தேர் முதலியவற்றைப் பின்னிருந்து அழித்தல், துரோணன் அபிமன்னுவின் வாளை அழித்தல், தேர்ச்சக்கரங்களைக் கொண்டு அபிமன்னு போரிடல். அபிமன்னு உதவிகேட்டு சங்கு முழங்குதல் இந்த முழக்கம் விசயனுக்குக் கேளாதபடி கண்ணன் சங்கை முழங்குதல் துச்சாதனன் மகன் துச்சனி அபிமன்னுவுடன் கடும்போர் புரிதல், போரிட்டு இளைத்து துச்சனி அபிமன்னு இருவரும் இறத்தல், அபிமன்னு இறந்ததற்கு யாவரும் இரங்குதல், அபிமன்னு இறந்ததைக் கேட்டு தருமன் முதலானவர்கள் புலம்புதல் அபிமன்னு இறந்ததைக் கேட்டு கௌரவர் மகிழ்தல் வியாசர் வந்து தருமனுக்கு ஆறுதல் கூறுதல்.

## Referencessssss


அரசு, வீ & மௌனகுரு, சி., (2004) கட்டியம் அப்பண்ணசாமி, அரவான் நாடக விமரிசனம், சென்னை,

சண்முகம் (2006), தமிழ்நாட்டில் பாரதம், போதிவனம், சென்னை.

சீனிவாசன், இரா. (2007), நல்லாப்பிள்ளை பாரதம், கலைக்கோட்டம், சென்னை.

சீனிவாசன்., குணாநிதி, த, நவம், மு.ப., (2022), மகாபாரத வசன காவியம் சண்முகக் கவிராயர், பரிசல் புத்தகம் நிலையம், சென்னை.

பரிமேலழகர் (1962) திருக்குறள், பழனியப்பா பிரதரஸ், சென்னை.

ஜெயமோகன் (1995), நாவல், மடல் பதிப்பகம், சென்னை,

ஜெயமோகன் (2005) வடக்குமுகம், தமிழினி, சென்னை,

ஜெயமோகன் (2007) ஜெயமோகன் குறுநாவல்கள், உயிர்மை சென்னை.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License